2022 ஏப்ரல் 18] [திரு. கே.பி. முனுசாமி]

உரிய நஷ்ட ஈடு வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள்.*

(ஈ) கோடைக் காலத்தில் ஏற்படும் மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. கோடைக் காலத்தில் மின்வெட்டைக் குறைப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், திரு. மா. சின்னதுரை அவர்கள், திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள், திரு. பி. தங்கமணி அவர்கள், திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள் திரு. K. மாரிமுத்து அவர்கள், திரு. ஜி.கே. மணி அவர்கள் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

(மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு பேச வாய்ப்புக் கேட்டுக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. நாகைமாலி, நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. வி.பி நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது சுட்டெரிக்கும் வெயில் நம்மை வாட்டத் துவங்கியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நேரங்களில் மின்சாரத்தைச் சீரமைப்பது அரசினுடைய கடமை என்கிற முறையில், மின்வெட்டு மற்றும் மின் தடையால் பொது மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

[2022 ஏப்ரல் 18

(மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு பேச வாய்ப்புக் கேட்டுக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். முதலில் அனைத்து உறுப்பினர்களும் உட்காருங்கள்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முதலில் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், சிறப்புக் கவன ஈர்ப்பில் ஒரு கேள்வி கேட்க மட்டும் வாய்ப்பளிக்கப்படும். 'நான் கேள்வியைப் பதிவு செய்துவிடுகிறேன்' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாய்ப்புக் கேட்டார்கள். அவர் கேட்ட கேள்வி பதிவு செய்யப்பட்டுவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான பதில் முழுவதையும் முதலிலேயே சொல்லிவிட்டார்கள். முதலில் தெரிவித்த பதிலிலேயே யானை மிதித்து இறக்க நேரிட்டால் அதற்கு எத்தகைய நிவாரணம் வழங்கப்படும் என்று பதிவாகிவிட்டது. அடுத்ததாக, யானை புகாமலிருக்க வேலி அமைக்கப்படும் என்றும், பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்துவிட்டார்கள். இரண்டாவது முறையாக, அதே பதிலை எப்படி* repeat *செய்ய முடியும்? (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.*

பிற்பகல் 12–15

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடை வெயில் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், தினந்தோறும் பத்து முறைக்கு மேல் மின்வெட்டு ஏற்படுகின்றது. மின் பற்றாக்குறை இருப்பின், ஏதாவது ஒரு குறிப்பிட்ட நேரத்தை அறிவித்து, அந்த நேரத்தில் மின்சாரம் இல்லையென்று சொன்னால், விவசாயிகளும் சரி, தொழிலதிபர்களும் சரி, விசைத்தறி அதிபர்களும் சரி, அதற்குத் தகுந்த மாதிரி பாதுகாத்துக்கொள்வார்கள். இது குறித்து நாம் பேசுவதற்கு முன்பாக சட்டமன்றப் பேரவையில் இன்றுகூட ஒரு நிமிடம் மின்வெட்டு ஏற்பட்டது என்பதை நீங்கள் கண்கூடாகப்

2022 ஏப்ரல் 18] [திரு. பி. தங்கமணி]

பார்த்தீர்கள். விசைத் தறி நெசவாளர்களும், விவசாயிகளும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற மின்வெட்டு அடிக்கடி ஏற்படுகின்றபோது, விவசாய மின் மோட்டார்கள் அனைத்திலும் காயில்கள் போய்விடுகின்றன. இதன் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் எங்களிடத்தில் இது குறித்து சட்டமன்றப் பேரவையில் பேசுங்கள் என்று பல முறை தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். கோடைக் காலம் என்று சொன்னாலே, நிலக்கரி பற்றாக்குறை இருக்கும் வாய்ப்பு உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். நிலக்கரி பற்றாக்குறை இருக்கும். நமது அரசு அதற்கேற்றாற்போல், நிலக்கரி கையிருப்பு வைத்திருக்க வேண்டும். நிலக்கரி பற்றாக்குறை இருக்கிறது என்கின்ற செய்திகள் வருகின்ற காரணத்தினால், நிலக்கரி பற்றாக்குறை இருக்கிறதா என்பதை அறிந்து, இனிவருங்காலத்தில், மின்வெட்டு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வுக் காலம் தொடங்கியிருக்கிறது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் அனைவரும் அவர்களுக்கான தேர்வுக் காலம் தொடங்கியிருப்பதன் அடிப்படையில், அவர்கள் படிப்பதற்கு வசதியாக மின்சாரம் வழங்க வேண்டும். மேலும், இது கோடைக் காலமாக இருப்பதாலும், மழைப் பொழிவு குறைவாக இருப்பதன் காரணத்தினாலும், நிலத்தடி நீரைக் கொண்டுதான் விவசாயப் பெருமக்கள் விவசாயம் செய்கிறார்கள். அவர்களுக்கும் மின்வெட்டு இல்லாத, பற்றாக்குறை இல்லாத மின்சாரத்தை வழங்குவதற்காக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

[2022 ஏப்ரல் 18

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்சாரம் இல்லாமல் வாழலாம். ஆனால், மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்பது மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகின்ற நிலை. தற்போது கோடைக் காலம், சுட்டெரிக்கின்ற வெயில் வாட்டுகின்ற நிலையில், தமிழ்நாட்டில் பரவலாக ஆங்காங்கே மின்வெட்டு ஏற்படக்கூடிய நிலை உள்ளது. கோடைக் காலத்தில் மின் பயன்பாட்டுத் தேவையும் அதிகரித்திருக்கிறது. வெயில் காலமாக இருப்பதால், புழுக்கமாக இருக்கிறது. அனைவரும் வீட்டில் தூங்கும்போது, முழு நேரமும் மின்விசிறி ஓட வேண்டிய சூழ்நிலை உள்ளது. மாணவர்கள் படிக்கின்ற சூழ்நிலையும் உள்ளது. மின்வெட்டு ஏற்பட்டால் படிக்க முடியாது. விவசாயம் மற்றும் அனைத்துத் தொழில்களுக்கும் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு. எனவே, மின்வெட்டு முழு அளவில் வரவில்லையென்றாலும்கூட, ஆங்காங்கே பரவலாகத் தொடங்கியிருக்கின்ற நிலை. இதற்குக் காரணம், நிலக்கரி பற்றாக்குறை என்று சொல்லப்படுகிறது. இன்னும் தமிழ்நாட்டிற்குத் தேவையான நிலக்கரி, மின் உற்பத்திக்குக் குறைந்த அளவில்தான் இருப்பதாக பரவலாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, தமிழக அரசு, தேவையான நிலக்கரியினைக் கையிருப்பு வைத்துள்ளதா? இந்திய அளவிலேயும் நிலக்கரி பற்றாக்குறை இருக்கின்ற சூழ்நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது, அந்த நிலை ஏற்பட்டால், எதிர்காலத்தில் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்பதையெல்லாம் தமிழக அரசு கவனத்தில் கொண்டு மின்வெட்டு ஏற்படாமல் இருப்பதற்கும், மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அரசு முனைப்போடு செயலாற்ற வேண்டும் என்றும் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் காலம், சுட்டெரிக்கும் வெயில் ஆரம்பித்துவிட்டது. மின்சாரம் அதிக அளவில் தேவை என்றாலும், சில தினங்களுக்கு முன்பு, 1 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பைக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

2022 ஏப்ரல் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

உளுந்தூர்பேட்டையிலிருந்து கன்னப்பிள்ளை என்ற ஓர் விவசாயி பேசுகின்றபோது, "என்னுடைய காலத்தில் இவையெல்லாம் கிடைக்குமா என்று ஏங்கிக்கொண்டிருந்தேன். ஆனால், இது மிகவும் அதிசயமாக இருக்கிறது" என்று காணொளியில் பேசுவதை என்னால் காண முடிந்தது. ஏற்கெனவே சிறப்பான முறையில் செயலாற்றிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், 94987 94987 என்ற ஒரு தொலைபேசி எண்ணைக் கொடுத்து ஏறத்தாழ 7,57,000 புகார்கள் பெறப்பட்டு 99 சதவிகிதம் நிறைவேற்றப்பட்டதாக இன்றைக்கு படித்துக்கொண்டிருந்தேன். அதேபோன்று கடந்த 10 ஆண்டுகளில், 2,21,579 மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சராசரியாக ஆண்டுக்கு 22,000 மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், ஆறே மாதங்களில் ஒரு இலட்சம் மின் இணைப்புகளைக் கொடுத்து சாதனை படைத்திருக்கிறது, நம்முடைய அரசு என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. அதேபோன்று மின் உற்பத்தியை எடுத்துக்கொண்டால், 2021 ஆம் ஆண்டு வரை 15,531 மில்லியன் யூனிட் உற்பத்தியாக இருந்தது, தற்போது 20,391 மில்லியன் யூனிட் ஆக உற்பத்தி அதிகரித்துள்ளது. ஒரு வருடத்தில் 31 விழுக்காடு அதிகரித்திருக்கிறது. இது மிகவும் பாராட்டுக்குரிய செயலாகும். ஆனால், அதைத் தொடர்ந்து நாம் கண்காணிக்க வேண்டும். கோடை வெப்பத்தைத் தாங்காமல் மக்கள் அனைவரும் தற்போது குளிர்சாதன வசதியைப் பயன்படுத்தத் துவங்கிவிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இப்பணியில் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்மால் அறிய முடிகிறது. நேற்றைக்குக் கூட மகாராஷ்டிர மாநிலத்தின் மின் துறை அமைச்சர் அவர்களும், நானும் நாக்பூரில் நடைபெற்ற மகாராஷ்டிர மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களுடைய புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டோம். அந்நிகழ்ச்சியில் மகாராஷ்டிரா முதலமைச்சர் முன்னிலையில் அவர் சொல்லும்போது, தமிழகம், ஜார்கண்ட் போன்ற சில மாநில அரசுகள் பயனாளிகளுக்கு பயன்களை வழங்குவதில் சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன என்று கூறி, நம்முடைய மாநிலத்தில் ஒரு இலட்சம் இலவச மின்சார இணைப்புகளை விவசாயிகளுக்குக் கொடுத்திருப்பதை மிகப் பெருமையாகப் பேசினார்.

[திரு. கு. செல்வபெருந்தகை] [*2022 ஏப்ரல் 18 பிற்பகல் 12–20*

ஆகவே, இனிவருங்காலங்களில் இதேபோன்ற பணி தொடர வேண்டுமென்று கூறி, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்கிறேன். உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காரச் சொல்லுங்கள். நான் சொல்கிறேன். அவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்கிறேன். திரு. கோவிந்தசாமி, உட்காருங்கள். உட்காருங்கள்.*

அதாவது, அவைக்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். எனக்கு சட்டப்படியும் இந்த அவையை நடத்தத் தெரியும்; விதிப்படியும், மரபுப்படியும் எனக்கு நடத்தத் தெரியும். எனக்கு ஒன்றும் தெரியாதது அல்ல அது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சபையை நாகரிகமாக, ஜனநாயகமாக நடத்த வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் காலையில் வந்தீர்கள், கோரிக்கை வைத்தீர்கள், எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறினீர்கள், இன்றைக்கு திரு. வேலுமணி அண்ணன் அவர்கள் காலையில் வந்தீர்கள், எதையெல்லாம் எடுக்கப்போகிறீர்கள் என்றீர்கள். திரு. முனுசாமி அண்ணன் அவர்கள் வந்தார்கள். அப்போது நீங்கள் ஒரு கேள்விக்கு அனுமதியுங்கள் என்றீர்கள். ஜனநாயகரீதியில், இரண்டே இரண்டு பொருட்கள் குறித்த அறிவிப்புகள் மட்டும் விதி 55-ன்கீழ் எடுக்க வேண்டும். இன்றைக்கு, சிறப்புக் கவன ஈர்ப்பாக நான்கு எடுத்திருக்கிறேன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு Agenda-*இல் உள்ளது. ஒன்று திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கொடுத்ததை எடுக்கவிருக்கிறேன். எல்லோருமே, மிரட்டலாம், உருட்டலாம் என்பதை மட்டும் தயவுசெய்து, மனதில் வைத்துக்கொள்ளாதீர்கள். (குறுக்கீடு) இல்லை, நான் பொதுவாகத்தான் சொல்கிறேன். உங்கள் யாரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. திரு. வேல்முருகன் அவர்கள் சொல்லும்போது, எழுந்து கேட்டார். தி.மு.க. என்ற கணக்கில்தான் இருக்கிறீர்கள். ஓர் உறுப்பினர்தான் பேச வேண்டும். (குறுக்கீடு) திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் பேசிவிட்டார்.* Grace time *(குறுக்கீடு) உட்காருங்கள், சொல்கிறேன். உட்காருங்கள் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதை நான் நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு)*

2022 ஏப்ரல் 18]　　[பேரவைத் தலைவர்]

உட்காருங்கள் நான் சொல்கிறேன். உட்காருங்கள். உங்கள் பெயரை நான்தான் வாசித்தேன். உட்காருங்கள் சொல்லிவிடுகிறேன். கட்சிக்கு ஒருவருக்குத்தான் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும். திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் பேசிவிட்டார். அதற்கு பிறகு உங்களுக்கு அந்த வாய்ப்பைத் தந்திருக்கிறேன். வாய்ப்பு தந்தால் இரண்டு நிமிடங்களில் உரையை முடிக்க வேண்டும். எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. அவர்களுக்கு கொடுத்ததுபோல் எனக்கும் வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்பதற்கு இந்த அவையில் உரிமை இருக்கிறது. யாருக்கும், பாதிப்பு கூடாது. பாதுகாப்பு இல்லாமல் இருக்காது. எல்லோரையும் அரவணைத்துப் போக வேண்டும். அதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய எண்ணம். அந்த அடிப்படையில்தான் சபையில் யாருக்கும் மறுப்பு சொல்லாமல் இருக்கிறோம். ஆகவே, அதை மனதில் வைத்து, செயல்பட வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 4 சிறப்புக் கவன ஈர்ப்புகளை எடுத்திருக்கிறீர்கள். இதில் மாற்றுக்கருத்து இல்லை. நாங்கள் பிரதான எதிர்க்கட்சி. நிறைய கோரிக்கைகள் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள், அவருடைய உரிமையைக் கேட்டார். மிரட்டல், உருட்டல் எல்லாம் இல்லை. உரிமையை உங்களிடம்தான் கேட்க முடியும், அதனால்தான் கேட்டார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அப்படிச் சொல்லவில்லை.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *நீங்கள் மிரட்டல், உருட்டல் என்று சொன்னீர்கள். அதுமாதிரியெல்லாம் எதுவுமில்லை. அவருடைய உரிமையைக் கேட்டார். இன்றைக்கு 4 சிறப்புக் கவன ஈர்ப்புகள் குறித்து எடுத்திருக்கிறீர்கள். அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. மீதியை நாளை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 55-ன்கீழ் இரண்டு கவன ஈர்ப்புகள்தான் எடுத்துக்கொள்வோம். அதன்பிறகு கடைசி நாள்தான் இப்படி* liberal *ஆக எடுப்போம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு ஒரே அமைச்சர் பதில் சொல்வதனால் தாராளமாக அதை எடுங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே*

தவிர, யாருக்கும் எடுக்காதீர்கள், அந்தக் கட்சிக்கு எடுக்காதீர்கள், இந்தக் கட்சிக்கு எடுக்காதீர்கள் என்று சொல்லவில்லை. நீங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். அந்த அடிப்படையில் சபை நாகரிகமாக இனிமேலும் நடக்கும். எப்போதும் இந்த அவையில் நீங்கள் கேட்கிற கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றித் தருவதற்குத்தான் இருக்கின்றோம். ஆகவே, அதை எல்லோரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் பதில்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு மின்னிணைப்பு என்ற உன்னதமான திட்டம் கடந்த 23–9–2021 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஓராண்டுக்கு முன்பாகவே, குறிப்பாக, 23–3–2022 அன்று ஆறு மாதகாலம் நிறைவடைந்ததையொட்டி கடந்த 16 ஆம் தேதி, மின் வாரியத்தினுடைய தலைமை அலுவலகத்தில் ஒரு இலட்சமாவது விவசாயிக்கான மின்னிணைப்பிற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சருடைய திருக்கரங்களால் வழங்கி, விவசாயிகளுடன் கலந்துரையாடி, எழுச்சியுரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழக விவசாய பெருமக்கள் சார்பாகவும், மின் வாரியத்தின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை இந்த நேரத்திலே பணிவன்போடு சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கோடைக் காலத்தில் அதிகரித்து வருகின்ற மின் தேவையைக் கருத்திலேகொண்டு, குறிப்பாக, கடந்த 2021 ஆம் ஆண்டில் இதே காலக்கட்டத்தில் தமிழ்நாட்டிற்குத் தேவைப்பட்ட மொத்த மின்சாரத்தினுடைய அளவு 13,500 மெகா வாட்டிலிருந்து 14,000 மெகா வாட்வரை மட்டுமே இருந்தது. ஆனால், தற்போது, தமிழ்நாட்டினுடைய உச்சபட்ச மின் தேவை 17,196 மெகா வாட்டாக, 29–3–2022 அன்று விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் உச்சபட்ச நுகர்வு என்பது 375 million unit அளவிற்கு 29–3–2022 அன்று விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் இந்தக் கோடைக் காலத்தில், மின் பற்றாக்குறை என்பது 2,500 மெகா வாட் வரை இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

2022 ஏப்ரல் 18] [திரு. V. செந்தில்பாலாஜி]

இந்த மின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியதன் அடிப்படையில் பல்வேறு சீர்திருத்த, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, Pilot Scheme–II–க்கு PTC மூலமாக நடுத்தரகால கொள்முதலாக 400 மெகா வாட்டும், மத்திய மின் தொகுப்பிலிருந்து 555 மெகா வாட்டும், PTC மூலமாக நடுத்தரகால கொள்முதல் மூலமாக 627 மெகா வாட் என மொத்தம் நடுத்தரக்கால கொள்முதல் 1,582 மெகா வாட் அளவிற்கு போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிக் காட்டுதலின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இப்போது மின்சாரம் பெறப்பட்டு வருகின்றது.

பிற்பகல் 12–25

அதேபோல், ஏப்ரல் மாதத்திற்கு 965 மெகா வாட்டும், மே மாதத்திற்கு 925 மெகா வாட்டும், குறுகிய கால கொள்முதலாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கு தலா 240 மெகா வாட் மற்றும் உபரி மின்னாற்றல் பரிமாற்றம் மூலமாக தலா 260 மெகா வாட் என மொத்த குறுகிய காலக் கொள்முதலாக ஏப்ரல் மாதத்திற்கு 1,465 மெகா வாட், மே மாதத்திற்கு 1,425 மெகா வாட் என கூடுதலாக மின்சாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தமாக, கொள்முதல் ஏப்ரல் மாதத்தில் 3,047 மெகா வாட்டும், மே மாதத்தில் 3,007 மெகா வாட்டும் பெறுவதற்கான நடவடிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கும், இந்த மன்றத்திற்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்கள்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் 2021–2022 ஆம் ஆண்டில் 20,391 million unit என்பதுதான் அதிகபட்ச உற்பத்தியாக இந்த ஒரே ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இது, கடந்த ஆண்டு 2020–2021 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 15,553 million unit என்பது 20,390 million unit ஆக அதாவது 4,837 million unit, ஆக அதிகரித்து, 31 விழுக்காடாக மின் உற்பத்தியை தமிழ்நாடு மின்சார வாரியம் அதிகரித்திருக்கிறது.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2022 ஏப்ரல் 18

அதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த ஊக்கம் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

மேலும், கூடுதலாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரலாற்றின் ஒரு முக்கிய நிகழ்வாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த சீர்திருத்த நடவடிக்கையின் காரணமாக மிகக் குறைந்த விலையில், அதாவது 1,000 மெகா வாட் சூரிய மின்சக்தி கழகத்திடமிருந்து யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 61 பைசாவிற்கு மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தமும் மற்றும் நெய்வேலி அனல் மின் நிறுவனத்தின்மூலம் 1,500 மெகா வாட் 3 ரூபாய் 4 பைசாவிற்கு மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தமும் போடப்பட்டிருக்கின்றன.

நிலக்கரியைப் பொறுத்தவரையில், ஒரு நாளைக்கு 72,000 டன் நிலக்கரி தேவைப்படுகிறது. ஆனால், நமக்கு 48,000 முதல் 50,000 டன்தான் வந்து கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில், பல்வேறு மாநிலங்களில் நிலக்கரி பற்றாக்குறையின் காரணமாக மின்வெட்டுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக, கடந்த காலங்களில், தமிழ்நாட்டில் மின்வெட்டே இல்லையென்ற அளவிற்கு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டது. இப்போதும் நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலக்கரி பற்றாக்குறையைப் போக்குவதற்காக 4,80,000 டன் நிலக்கரியை இறுக்குமதி செய்வதற்காக tender கோரப்பட்டிருக்கின்றது. இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் அந்த tender இறுதி வடிவம் பெற இருக்கின்றது. மின்சார வாரியம் கொள்முதல் செய்வதற்காக நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில், சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சில பகுதிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். துணை மின் நிலையங்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது குறிப்பிட்ட பகுதிகளில் மின்சாரம் நிறுத்தப்படும் என பொது மக்களுக்கு ஊடகம் வாயிலாகவும், நாளிதழ் மூலமாகவும், வானொலி மூலமாகவும் தகுந்த முன்னறிவிப்பு செய்யப்பட்ட பின்னரே, பராமரிப்புப்

2022 ஏப்ரல் 18] [திரு. V. செந்தில்பாலாஜி]

பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட மின் பராமரிப்புப் பணிகளுக்கு மின்சாரம் நிறுத்தப்படுவதைத் தவிர்த்து, தமிழ்நாட்டில் இதுவரை மின்வெட்டு இல்லை. எந்தக்காலத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழ்நாட்டில் மின்வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கு அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 2,500 மெகா வாட் மின்சாரம் நமக்கு கூடுதலாகத் தேவை. 3,000 மெகா வாட் அளவில் கொள்முதல் செய்வதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மின்சார வாரியம் எடுத்திருக்கிறது. மின்சார வாரியம் சீரான மின்சாரம் வழங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II-ல் அனைத்து பேரூராட்சிகளையும் இணைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II-ல் அனைத்து பேரூராட்சிகளையும் சேர்க்க வேண்டியது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையில் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.